**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 383/2025</u>**

**<u>வழக்கு சாட்சி PW-6</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேர்மத்துரை | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்வம் | தொழில் | : | தனியார் நிறுவன வேலை |
| கிராமம் | : | நல்லூர் | வயது | : | 23 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 06.05.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் நல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். 2023ம் வருடம் ஆலங்குளம் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டுக்கொடுத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் அசாஆ.3 ஆகும். அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் அசாஆ.4 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 26.03.2023ம் தேதி மாலை 19.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடத்தை போலீசார் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், சாட்சி தமிழ்மணி என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. பின்னர் அன்றைய தினம் 20.30 மணிக்கு சம்பவயிடத்தில் வைத்து இரத்தம்பட்ட மண், இரத்தம்படாதமண், இரத்தக்கறை படிந்த செருப்பு 1 ஜோடி ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி அத்தாட்சி மற்றும் பார்வை மகஜரில் நானும், தமிழ்மணி என்பவரும் கையெழுத்து செய்ததாக கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.19 12:54:19 +0530